# பத்மனாபபுரம் நகராட்சி

நவம்பர் 2018–ம் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள் விபரம் .

1)இந்நகராட்சிக்குட்பட்ட பெருமாள்கோவில் சாலையில் உள்ள வடிகால் பக்கச் சுவர் மற்றும் தார்ச்சாலை கடந்த ஒரு வாரமாக பெய்த கனமழையில் சேதமடைந்துள்ளதால் அதனை சீர் செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.2.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சாலைப் பகுதியில் அமைந்துள்ள பெருமாள் கோவிலுக்கு பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் வண்ணம் உள்ளதால் பொது மக்கள் நலன் கருதியும், அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற திரு. சி. ஜார்ஜ், ஒப்பந்ததாரர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் நகராட்சி சட்ட விதி எண். 15–ன் கீழ் செய்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1898/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1379</u>

அனுமதிக்கப்பட்டது.

2)இந்நகராட்சிக்கு சொந்தமான தக்கலை பேட்டை சந்தையில் உள்பக்கம் இடபுறம் உள்ள வரிசை எண். 1 முதல் 9 வரை உள்ள ஸ்டால்களுக்கு இது நாள் வரையிலும் பேட்டை சந்தையை குத்தகை அனுபவ உரிமைக்கு எடுக்கும் குத்தகைதாரரே தினசரி வாடகை பெற்று அனுபவித்து வந்துள்ளனர். மேற்படி ஸ்டால்கள் நகராட்சி வைப்புத் தொகை நிர்ணயம் செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் மாதவாடகை அடிப்படையில் கடைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு கேட்பு எழுப்பும் பட்சத்தில் நகராட்சிக்கு கூடுதல் தொடர் வருவாய் கிடைக்க வழிவகை உள்ளது.

எனவே மேற்படி 9 ஸ்டால் கடைகளுக்கும் ஒரு கடைக்கு வைப்புத் தொகை ரூ.50,000/– எனவும், மின்சார வைப்புத் தொகை ரூ.10,000/– எனவும் நிர்ணயம் செய்து ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரி மாத வாடகைக்கு ஒப்படைக்கலாம். அவ்வாறு மேற்படி கடைகளுக்கு நகராட்சி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி வாடகைக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் பேட்டை சந்தை நுழைவு கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமைக்கு குத்தகைக்கு எடுக்கும் குத்தகைதாரர் மேற்படி கடைகளுக்கு (மற்றும்) M.L.A Fund உள் கடைகள் 1 முதல் 8 கடைகளுக்கும் பொருட்கள் கொண்டு வரும் கடை அனுபவதாரர்களிடம் பேட்டை சந்தை நுழைவு கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமைக்கு தெரிவிக்கப்படுடள்ள நிபந்தனைகளின் படி நுழைவு கட்டணம் வசூல் செய்து கொள்ளவும் தெரிவித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு–

1)தக்கலை பேட்டை சந்தை ஸ்டால் கடைகள் 1 முதல் 9 வரை ரூ.50000/– வைப்புத் தொகை ரூ. 10000/– என நிர்ணயம் செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழஙகலாம்.

2) தக்கலை பேட்டை நுழைவு கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமைக்கு ஒப்பந்தம் செய்யப்படும் குத்தகைதாரர் மேற்படி கடைகள் முதல் 9 வரை உள்ள கடைகளின் குத்தகை உரிமைதாரர் மற்றும் பேட்டை சந்தை M.L.A Fund உள்கடைகள் வரிசை எண். 1 முதல் 8 வரை உள்ள கடைகளின் குத்தகை உரிமைதாரர்கள் சந்தைக்குள் கொண்டு வரும் பொருட்களுக்கு பேட்டை சந்தை நுழைவு கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர் குத்தகை நிபந்தனைகளின் படி நுழைவு கட்டணம் வசூல் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.

3) சந்தையினுள் உள்ள இரு பக்கத்தில் உள்ள ஸ்டால்கள் மற்றும் கடைகள் (9+8) 17 கடைகளை மாத வாடகை அடிப்படையில் நகராட்சி வசூலிக்கும் இதில் குத்தகைதாரர் எவ்வித ஆட்சேபனையும் செய்ய கூடாது.

(ந.க.எண். 1981/2018/அ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1380</u>

அனுமதிக்கப்பட்டது.

3) தமிழக அரசின் ஓராண்டு சாதனைகளை விளக்கி சாதனை மலர் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண்.166/செ.ம.தொ.அ/2018 நாள் –03–2018–ன் படி ஆசிரியர் மதுரை மணி நாளிதழ் என்ற நிறுவனத்திற்கு பரிந்துரைத்து சாதனை மலர் வெளியிட அறிவுறுத்தப்பட்டது மேற்படி இந்நகராட்சியில் 2016–17 மற்றும் 2017–18– ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகளின் விபரஙகளை மதுரை மணி நாளிதழில் 1/4 பக்கம் அளவில் ரூ.7500/– செலவில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.7500/– GST 5% %.375/- சேர்த்து மொத்தம் ரூ.7875/–னை மதுரை மணி நாளிதழ் நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.555/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1381</u>

அனுமதிக்கப்பட்டது.

4) இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தை வணிக வளாக பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் பயன்படுத்தி வரும் எரிவாயு அடுப்பு பழுது பணிகள் பார்க்கவும் மற்றும் கட்டிட உள் பகுதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் **09-11-2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | திரு. வி.ராஜேந்திரன் சூசை நகர் | 1.34 | 1.342 |
| 2. | திரு. என். ஜான் ஜஸ்டஸ் | 0.001 | - |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. என். ஜான் ஜஸ்டஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவசர அவசியம் கருதி ஆணையரின் முன் அனுமதியை பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1222/2018/இ1)**

<u>**மன்றத் தீர்மானம் எண்.1382**</u>

அங்கீகரிக்கலாம்.

5) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2016-2017-ன்** கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட கல்குளம் தாலுகா முன்பு பூங்கா அமைத்து அதனைச் சுற்றி அலங்கார சுவர் கட்டும் பணிக்கு **09-11-2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் (மதிப்பீடு ரூ.**10.00** இலட்சம்) வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் (சதவீதம் ) | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | திரு . ஜி. சுந்தர்ராஜ் பள்ளியாடி | - | 4.08 |
| 2. | திரு. சி. ஜெகஸ்லால் அறப்புரைவிளை, பரைக்கோடு | 0.002 | - |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஜெகஸ்லால் (0.002 சதவீதம் குறைவு) என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசியம் கருதி ஆணையாளரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1729/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1383</u>

அஙகீகரிக்கலாம்.

6) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட இராமன்பறம்பு பிள்ளையார் கோவில் அருகில் உள்ள பண்டாரக்குளம் என்ற செட்டிக் குளத்தில் படித்துறை மற்றும் பக்கச் சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ள (மதிப்பீடு ரூ.10.00இலட்சத்தில்) 09–11–2018–ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் (சதவீதம் ) | |
|---|---|---|---|
| | | குறைவு | அதிகம் |
| 1. | திரு . சி. ஜெகஸ்லால்<br>அறப்புரைவிளை<br>பரைக்கோடு | – | 0.76 |
| 2. | திரு. சுந்தர்ராஜ்<br>பள்ளியாடி | –0.02<br>குறைவு | – |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான –0.02 சதவீதம் (மதிப்பீட்டினைவிட குறைவு)ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜி. சுந்தர்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசிய அவசரம் கருதி ஆணையாளரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.484/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1384</u>

அஙகீகரிக்கப்பட்டது.

7) இந்நகராட்சியில் மறு சுழற்சிக்கு பயன்படும் வகையில் உள்ள பழைய இரும்பு பொருட்ளை ஏலம் விடுவதற்கு பொது ஏலம் 14–11–2018 அன்று இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் வைத்து ஏலம் விடப்பட்டது. மேற்கண்ட ஏலத்தில் 8 நபர்கள் கலந்து கொண்டு ஏலம் கேட்டனர்.

மேற்படி ஏலம் கேட்கப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண். | ஏலதாரரின் பெயர் | ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருட்களின் விபரம் | ஏலத்தில் கேட்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. ராஜகுமார் | பழைய இரும்பு பொருட்கள் | கிலோ ஒன்றுக்கு ரூ. 12/–க்கு |
| 2. | திரு. தேவராஜ் | பிளாஸ்டிக் தகரம் சேர்த்து | ரூ.7/–க்கு |
| 3. | திரு. ராஜகுமார் | கிளாஙடேன் 9 எண்ணம் | ரூ.56/–க்கு |
| 4. | திரு. செல்லத்துரை | Highmass cover 65 Nos | ரூ.35/–க்கு |
| 5. | திரு.சி.என். தாஸ் | 40W, 250W, 70W Choke Item 328 Nos | ரூ.7/–க்கு |
| 6. | திரு.ராஜகுமார் | 40W Tube light fittings 79 Nos மற்றும் starter bulb ஆகியவை சேர்த்து மொத்தம் | ரூ. 2/–க்கு<br>ரூ.100/–க்கு |

மேற்கண்ட ஏலத்தில் கேட்கப்பட்ட பொருள்களுக்கு கிலோ ஒன்று வீதம் தொகையின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | தொகையின் விபரம் கிலோ ஒன்றிற்கு | தொகை செலுத்தப்பட வேண்டிய ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | 12 x 3000 =36000 | திரு.ராஜகுமார் |
| 2. | 7 x 100 = 700 | திரு.தேவராஜ் |
| 3. | 9 x 56 = 504 | திரு.ராஜகுமார் |
| 4. | 65 x 35 = 2275 | திரு. செல்லத்துரை |
| 5. | 7 x 3028 = 21196 (1 எண்ணத்திற்கு) | திரு. சி.என். தாஸ் |
| 6. | 2 x 79 = 158 (1 எண்ணத்திற்கு) Starter Bulb = 100 | திரு. ராஜகுமார் |
| | மொத்தம் ரூ. **60993/–** | |

மேற்படி ஏலத்தில் கேட்கப்பட்ட வரிசை எண். 2 முதல் 6 வரையிலான உள்ள தொகையினை சம்மந்தப்பட்ட ஏலதாரர்கள் தொகையினை உடனடியாக செலுத்தவும், மன்றத்திற்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1830/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1385</u>**

அனுமதிக்கப்படுகிறது.

8) இந்நகராட்சிப் பொது சுகாதாரம் பிரிவிற்கு 2018–2019–ம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/–க்கு மேற்படி செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– செலவு தொகை ரூ.5,00,000/– பொது நிதியில் இருந்து அனுமதிக்கலாம்.

(973/2015/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1386</u>**

அனுமதிக்கப்படுகிறது.

9) இந்திய செஞ்சிலுவை சஙகத்திற்கு ஆண்டு சந்தா தொகையாக ரூ.2500/– வீதம் 2015–2016–ம் ஆண்டு முதல் 2018–2019–ம் (2500 x 4 = 10000) ஆண்டு வரை ரூ.10000/– இந்திய செஞ்சிலுவை சஙகத்திற்கு வழஙகவும், செலவு தொகையினை பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழஙகலாம்.

(319/2015/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1387</u>**

அனுமதிக்கப்படுகிறது

10) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் ஒகிபுயல் பாதிப்பினால் சேதமடைந்ததையொட்டி அவற்றை சீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகள் குடிநீர் பராமரிப்பு பணியாவதால் மேற்படி இந்நகராட்சி ஒகிபுயல் நிவாரண நிதி குடிநீர் நிதியில் இருந்து பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.538/2018/இ1)

<u>**மன்றத் தீர்மானம் எண்.1388**</u>

அனுமதிக்கப்படுகிறது.

11) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெஙகு கொசுக்களால் பரவும் டெஙகு நோய்கள் வராமல் தடுக்கும் பொருட்டு வீடு வீடாக சென்று கண்காணிக்கவும் கொசுக்களின் வாழ்வாதாரஙகளை அழிக்கவும் 15 தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் ஆகியோரின் அறிவுறுத்தலின் படியும், இந்நகராட்சி துப்புரவு ஆய்வரின் குறிப்பின் படியும் 01–11–2018 முதல் ஏற்கனவே பணிபுரிந்து வரும் அதே பணியாளர்களே மேலும் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகையான ரூ.3.00 இலட்சம் பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 01–11–2018 முதல் தொடர்ந்து பணியாற்றியமைக்கு அனுமதி வழஙகலாம்.

அ.கு– செலவு தொகை உத்தேசமாக ரூ.300000/–ஐ பொது நிதியிலிருந்து வழஙகலாம்.

(ந.க.எண்.3827/2018/அ2)

<u>**மன்றத் தீர்மானம் எண்.1389**</u>

அனுமதிக்கப்படுகிறது.

12) சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி வார்டு எண்.15–ல் ராமன்பறம்பு பகுதியில் உள்ள பண்டாரகுளம் என்னும் நீர்நிலையில் நீர் உள்வரத்து மற்றும் வெளியேறும் பகுதிகளை சீர் திருத்தி கட்டமைத்து மக்கள் பயன்பாட்டிற்கான படித்துறை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் (ம) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ3/5128/2018, நாள் 17–11–2018–ன் படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1683/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1390</u>

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/–(எஸ். மூர்த்தி)
தனி அலுவலர் (ம) ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.